IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
KATPADI, VELLORE DISTRICT.

CC NO.45/2026

DEPOSITION OF WITNESS P.W.1

| | | |
|---|---|---|
| NAME | : | PUGAZHENTHI |
| FATHER'S NAME | : | PONNUSAMY |
| VILLAGE | : | VIRNCHIPURAM |
| OCCUPATION | : | HC |
| AGE | : | 39 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 2th day of MARCH 2026.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது காட்பாடி காவல்நிை லையத்தில் தலைமை காவரலாக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 24.12.2024 ம் தேதி நானும் உதவி ஆய்வாளர் சூரபதுமன், மற்றும் காவலர் வினோத்குமார் ஆகியோருடன் மதுவிலக்கு தடுப்பு சம்மந்தமாக காட்பாடி திருவள்ளுவர் நகர் அருகே சென்றோம். அப்போது காலை 7 மணியளவில் 2 நபர்கள் நின்று கொண்டிருந்தார்கள். அப்போது ஒருவர் மதுபாட்டிலை கொடுக்க ஒருவர் வாங்கி கொண்டிருந்தார். வாங்கி கொண்டிருந்த நபர் எங்களை பா பார்த்த உடன் ஓடிவிட்டார். ஆஜர் எதிரியை பரிசோதனை செய்த போது 180 மிலி அளவு கொண்ட டைமண்ட ரம் 30 மது பாட்டில்களை வைத்திருந்தரர். அவரை உதவி ஆய்வாளர் காரணம் கூறி கைது செய்தார். எதிரி எவ்வித அச்சுறுத்தலும் இன்றி தனாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை எங்கள் முன்னிலையில் பதிவு செய்தார். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் 1 வதாக உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த கையொப்பம் **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னுடன் வினோத் என்பவரும் கையொப்பம் செய்தார். கைப்பற்றுதல் மகசரில் உதவி ஆய்வாளர் கைப்பற்றினார். பின்னர் வழக்கு சொத்து எதிரியுடன் நிலையம் வந்து உதவி ஆய்வாளர் வழக்கு பதிவு செய்து எதிரியை நீதிமன்ற காவலுக்குட்படுத்தினார். உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

சம்பவம் இடத்திற்கு காலை 7 மணிக்கு சென்றோம். மக்கள்

நடமாட்டம் உள்ள பகுதி என்றால் சரிதான். கைப்பற்றுதல் மகசரில் 180 மிலி அளவு கொண்ட டைமண்ட ரம் 30 மது பாட்டில்களை கைப்பற்றினோம். வழக்கு சொத்தாக பையை கைப்பற்றவில்லை என்றால் சரிதான். கைப்பற்றும் போது வீடியோ பதிவு எடுக்கவில்லை என்றால் சரிதான். ஒப்புதல் வாக்குமூலம் காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்தோம் என்றால் சரிதான். சம்பவம் உண்மையில் நடந்திருந்தால் பையை கைப்பற்றிருப்போம் என்றும் சம்பவம் நடக்கவில்லை என்றால் சரியல்ல, பொதுமக்கள் யாரையும் சாட்சியமாக சேர்க்கவில்லை என்றும் உயர் அதிகாரி கேட்டு கொண்டதன் பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால்சரியல்ல. எதிரி மீது பொய் வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றும் எதிரிக்கும் வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால்சரியல்ல.

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
KATPADI, VELLORE DISTRICT.

CC NO.45/2026

DEPOSITION OF WITNESS P.W.2

| | | |
|---|---|---|
| NAME | : | VINOTH |
| FATHER'S NAME | : | VEERAKUMAR |
| VILLAGE | : | LATHERI |
| OCCUPATION | : | PC |
| AGE | : | 33 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 2nd day of MARCH 2026.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது காட்பாடி காவல் நிலையத்தில் காவரலாக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 24.12.2024 ம் தேதி நானும் உதவி ஆய்வாளர் சூரபதுமன், மற்றும் காவலர் புகழேந்தி ஆகியோருடன் மதுவிலக்கு தடுப்பு சம்மந்தமாக காட்பாடி திருவள்ளுவர் நகர் அருகே சென்றோம். அப்போது காலை 7 மணியளவில் 2 நபர்கள் நின்று கொண்டிருந்தார்கள். அப்போது ஒருவர் மதுபாட்டிலை கொடுக்க ஒருவர் வாங்கி கொண்டிருந்தார். வாங்கி கொண்டிருந்த நபர் எங்களை பார்த்த உடன் ஓடிவிட்டார். ஆஜர் எதிரியை பரிசோதனை செய்த போது 180 மிலி அளவு கொண்ட டைமண்ட ரம் 30 மது பாட்டில்களை வைத்திருந்தரர். அவரை உதவி ஆய்வாளர் காரணம் கூறி கைது செய்தார். எதிரி எவ்வித அச்சுறுத்தலும் இன்றி தனாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை எங்கள் முன்னிலையில் பதிவு செய்தார். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் 2 வதாக உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த கையொப்பம் **அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னுடன் புகழேந்தி என்பவரும் கையொப்பம் செய்தார். வழக்கு சொத்தை உதவி ஆய்வாளர் கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினார். பின்னர் வழக்கு சொத்து மற்றும் எதிரியுடன் நிலையம் வந்து உதவி ஆய்வாளர் வழக்கு பதிவு செய்து எதிரியை நீதிமன்ற காவலுக்குட்படுத்தினார். உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

சம்பவம் இடத்திற்கு காலை 7 மணிக்கு சென்றோம். மக்கள் நடமாட்டம் உள்ள பகுதி என்றால் சரிதான். கைப்பற்றுதல் மகசரில் 180 மிலி அளவு கொண்ட டைமண்ட ரம் 30 மது பாட்டில்களை கைப்பற்றினோம். வழக்கு சொத்தாக பையை கைப்பற்றவில்லை என்றால் சரிதான். கைப்பற்றும் போது வீடியோ பதிவு எடுக்கவில்லை என்றால் சரிதான். ஒப்புதல் வாக்குமூலம் காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்தோம் என்றால் சரிதான். ஒப்புதல் வாக்குமூலம் காவல்நிலையத்தில் தட்டச்சு செய்யபட்டது. சம்பவம் உண்மையில் நடந்திருந்தால் பையை கைப்பற்றிருப்போம் என்றம் சம்பவம் நடக்கவில்லை என்றால் சரியல்ல. பொதுமக்கள் யாரையும் சாட்சியமாக

சேர்க்கவில்லை என்றும் உயர் அதிகாரி கேட்டு கொண்டதன் பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால்சரியல்ல. எதிரி மீது பொய் வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றும் எதிரிக்கும் வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால்சரியல்ல.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு நேரடியாகச் சொல்லப்பட்டு, அவரால் உடனுக்குடன் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைகள் திருத்தம் செய்யப்பட்டு இன்று 02.03.2026 ஆம் தேதி பகரப்பட்டது.

S K P DILIP BABU Digitally signed by S K P DILIP BABU

நீதித்துறை நடுவர்,
காட்பாடி.